# பாரதியும் தேசியமும்

*முனைவர் கு. பிருந்தா*
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி
https://doi.org/10.5281/zenodo.15307903

## அகவுரை

*தமிழுக்கு நற்தொண்டன் பெண் விடுதலைக்கு வெற்றித் திலகம், சுதந்திர போராட்ட தியாகி கற்பனை ஓவியங்களுக்கு தலைவன், கவிஞன் என பல பரிமாணங்களில் மிளிர்பவர் பாரதியார். அவரின் தேசிய உணர்வோடு தியாகத்தைதான் நாம் கட்டுரையில் அறியப் போகிறோம்.*

*தமது 11 வது அகவையில் எட்டயபுர மன்னனின் பாராட்டை பெற்றதோடு "சுப்பிரமணிய பாரதி" என்ற புனை பெயர் பெற்று இன்றுவரை அதே புகழின் உச்சத்தில் சிம்மாசனம் போட்டு வீற்றிருப்பவர்.*

***"பாரதியார் ஒரு பெரிய மேதாவி; மகா பண்டிதர்; தெய்வீகப் புலவர்; ஜீவன் முக்தர். இவர் தமிழ்நாட்டு "ரவீந்திரநாதர்". இவர் எனது தமிழ்நாட்டின் தவப் பயன்".***

***- பாரதி நூல்கள்; பதிப்பு வரலாறு; பக்.11.***

## பாரதியாரின் புதிய உரு

*தன் கவிதை மூலம் மக்களிடம், அவர்களே அறியாது அடிமை வாழ்க்கை நடத்திக் கொண்டிருப்பதை அறிய தன் கவிதை மூலம் வீர உணர்வை ஊட்டி அக இருளை அகற்றியவர்.*

***"பாரதியார் கவிதை மூலம் விடுதலை உணர்வை ஊட்டியவர். அவரின் கவிதை உணர்வு திறத்தை" புதிய அறம்பாட வந்த "கவியரசர் பாரதி" என்கிறார் புலவர் சீனி விசுவநாதன் .***

***- பாரதி நூல்கள:பதிப்பு வரலாறு; பக்:12.***

***"பாரதி, சுதந்திரப் போராட்ட வீரர்களுடன் தானும் பங்கேற்றுத்தம் பாடல்களாலும் கட்டுரைகளாலும் மக்களுக்கு விழிப்புணர்ச்சியை ஊட்டுகின்றார்"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:2.***

## வாழ்வில் சமத்துவம் தேவை

*பாரதிக்கு முன் வந்த பல கவிஞர்கள் நாட்டின் அடிமை, மன்னராட்சி என்கின்ற ஒரு நிலையின் கீழ் மக்கள் அடிமைக் கட்டுண்டு கிடப்பதை எதிர்த்து போராடியிருக்கின்றார். நம் பாரதி மட்டும் இதை விட்டு விடவில்லை.*

*பாரதியாரும் தம் கவிதை மூலமாக பல்வேறு கோணங்களில் வாழ்விலும் தாழ்விலும் மக்கள் அனைவருக்கும் சமத்துவம் தேவை என்பதை தன் கவிதை மூலமாக சாடி இருப்பதைக் காண முடிகின்றது. மக்கள் தங்களுக்குள் பல்வேறு ஜாதி மதம் இனம் என பாகுபாடு செய்து சண்டையிட்டு தமக்குள் தாமே மோதி மடிவதைக்கண்டு மனம் வருந்தி கொந்தளித்து பாடுகிறார்.*

***"பாரதியும் அவனது கவிதைகளில் பல இடங்களில் பல்வேறு கோணங்களில் நின்று சமத்துவக் கொள்கையை வற்புறுத்துகிறான்"***

***- பாரதியும் சொல்லியும்; பக்:52.***

***"ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனுமில்லை ஜாதியில் மனிதர் யாரும் ஒரு நிகர் சமானமாக வாழ்வோமே".***

***- விடுதலை:2.***

***எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம்
எல்லாரும் இந்திய மக்கள்
எல்லாரும் ஓர் நிறை எல்லாரும் ஓர் நிலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர் !***

***-பாரதயின் சமுதாய சிந்தனைகள்; பக்:2.***

***"மக்களிடமிருந்து பெறும் வரிப்பணத்தின் பலத்தில்தான் அரசர்கள் உலகை ஆள்கிறார்கள்; ஆனால் அதே மக்கள் அந்த அரசனைப் பேய் போல்க் கருதி அஞ்சுகிறார்கள்"***

***- பாரதயின் சமுதாய சிந்தனைகள்; பக்:68.***

***"மன்னராட்சியை மறுக்கின்ற பாரதி"***

***-பாரதயின் சமுதாய சிந்தனைகள்; பக்: 68.***

*மகாபாரதத்தில், அரசவையில் பாஞ்சாலிக்கு கொடுமை செய்து வீதி வீதியாக பெண் என்றும் பாராது அவளை இழுத்து சென்ற இளவரசர் துச்சாதனனை அனுமதித்த அடிமைகளான "ஊராரை பெட்டை" என கொந்தளித்து கொதித்து குமுறுகிறான் பாரதி.*

*-பாஞ்சாலி சபதம்; பக் - 271.*

*"வறுமை, தான் வாழ்ந்த இறுதிநாட்கள் வரை கூடவே கைகோர்த்துக் கொண்டே வந்த போதும் கூட சுதந்திரத்துக்காகவும் சமத்துவத்துக்காகவும் போராட தயங்காத மாமனிதன் . கூனாதே , குனியாதே ! என்று தன்னுடன் இருந்த இளைஞர்களைக் கூட வளைய விடாமல் இருந்து ஒரு ராணுவ வீரனைப் போல நடந்து வந்த புரட்சியாளன்*

*- பாரதியின் தேசப்பற்று.*

## ஒரே சாதி ஒரே குலம்

***"இந்தியாவில் ஒரே சாதிதான் உண்டு. அதுவும் இந்து சாதி மட்டுமே என்றும் , இந்திய மக்கள் அனைவரும் இந்துக்களே என்றும் பாரதி அழுத்தமாக எடுத்துரைக்கின்றார்"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:6.***

***"இந்தியாவில் பிறந்த எல்லாருமே இந்துக்கள். இந்தியா , இந்து, ஹிந்து ஆகிய மூன்றுமே ஒரே சொல்லின் திரிபுகள்".***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:6.***

***"இந்தியாவில் பிறந்தவன் இந்திய ஜாதி அல்லது இந்து ஜாதி"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக் :7.***

## எதார்த்த வெளிப்பாடு - கவிதை

*"பாரதி படைப்புகள் அனைத்தும் சுய நலமற்ற மனிதனுக்கு வேண்டிய அனைத்து உரிமைகளையும் கடைபிடித்து என்றும் நிலையோடு வாழவேண்டும் என்கின்ற மேலோங்கிய உயர்ந்த பண்பு அவனிடம் குடிக் கொண்டிந்ததைஅவன்கவிதைமுலமாககாண முடியும். அவன் படைப்பின் வெளிப்பாட்டின் பாடுபொருள்களாக கடவுளையும் மன்னனையும் மன்னின் சிறந்தவர்களையும் மையக் கருத்தாக அமைந்திருக்கின்றன. இந்த நடை பாரதியின் கவிதைகளில் பெரும் பகுதி இடம்பிடித்திருந்தது.*

*பாரதி வருகைக்கு பின் கவிதை உலகின் மாற்றம் அறியலாம்.*

*அவன் படைப்புகளில் மக்கள் வாழ்ந்த அக்காலத்தின் சமுதாய நிலை பின்னணியை அறிய முடியும். இந்த எழுத்து நடைதான் அந்த நூற்றாண்டின் காலப் பின்னணியை அறிய உதவும் சான்று. இது எக்கால படைப்பு என தெள்ளத் தெளிவாக அறியவும் உதவும்.*

***"பாரதியின் படைப்புகள் அனைத்தும் அவர் கண்ட சமுதாயத்தையும் அவர் காண விரும்பிய தமது சமுதாயத்தையும் எதார்த்தமாக உண்மையாக வெளிப்படுத்துகின்றன"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:2.***

*அன்றைய காலத்தில் நாட்டின் சிறந்த தலைவர்களை அல்லது மன்னர்களை புகழ்ந்து பாடி பரிசில் நோக்கோடு கவிதை இயற்றும் மரபு இருந்தது. அம்மரபை ஒன்றுக் கொள்ளாத நம் கவிஞர், அதைச் சுட்டிக்காட்ட வேண்டும். மேலும், அவர்களின் தவறை அவர்கள்தானாகவே உணர வேண்டும் என்பது தான் அவருடைய போக்காக இருந்தது. அதில் உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பாகுபாடு அவருக்கில்லை. அவர்களிடம் இருக்கும் குற்றம் அதை அறிந்து திருத்துதல் வேண்டும் என்ற வகையில் மேலும் அவர்களின் நற்குணங்களை எடுத்தியம்ப வேண்டும். இதுவே நல்ல பண்புள்ள இலக்கியத்திற்கும் அடையாளம்.*

*இலக்கியம் என்பது நல்லவை குறைகள் இரண்டையும் இரண்டு கண்களாக பாவித்து எடுத்துக் காட்டுதல் வேண்டும். அதை தன் கருவியாக கையாண்டவர் பாரதியார்.*

***"தரம் கெட்ட நடைமுறை லட்சியங்களையும் உயர்ந்த கவிதையின் அந்தஸ்துக்கு உயர்த்தியவன் பாரதி"***

***- பாரதியும் ஷெல்லியும்; பக்:32.***

***"தமிழ் இலக்கியங்களின் தொடக்க காலம் முதல் பாரதி யுகத்திற்குச் சற்று முந்தைய காலம் வரை மரபுக்கவிதைகள் இலக்கிய உலகில் கோலோச்சி நின்றிருந்தன"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.***

***"பாடு பொருள்கள், கடவுளையோ, மன்னனையோ, மக்களில் சிறந்தவரையோ மையமிட்டு அமைந்திருந்தன".***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.***

***"பாரதியின் வருகைக்குப் பிறகுதான் தமிழ் கவிதை வரலாற்றில் பாடுபொருளின் மாற்றம் ஏற்பட்டது. அதற்குப் பாரதி கால சமூக வரலாற்று பின்னணிகளின் பாதிப்பே காரணம்"***

***-பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.***

**புரட்சி கவிஞரின் கவிதை மூலம் வெளிப்பாட்டு உணர்வு**

*பாரதியாரின் வாழ்நாள் காலம் மிகவும் கொடுமையான காலம் என்றுக்கூற வேண்டும். அவர் வாழ்ந்த அக்காலத்தில், அவர் முதல் தம் தேசத்து மக்கள் அனைவரும் எவரோ ஒரு கொடியவரின் கையின் சிக்கி புதையுண்ட நேரம் அது. எந்த ஒரு விடுதலையும் இன்றி வாழ்ந்த வாழ்நாள் அது.*

*தம்முடைய தேசம் இது என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் என்கின்ற உணர்வு எழுகிறது அவருக்குள். இந்த தேசம் நம்முடைய தேசமாக இருக்கும் போது எவனோ ஒருவன் ஏன் ஆட்சி செய்ய வேண்டும் அவன் ஆட்சியின் கீழ் நாம் ஏன் அடிமை வாழ்வு வாழ வேண்டும் என்கின்ற உணர்வு எழுகின்றது இந்த உணர்வை தன் தேசத்து மக்களுக்கும் உணர்த்த வேண்டும் என எண்ணுகின்றான் அந்த உணர்வின் வெளிப்பாடு தான் புரட்சி கவிதைகள். தன்னுடைய ரத்தம் கொதிக்கிறது தன் மக்கள் அடிமைப்பட்டு கிடப்பதை பார்க்கும் போது. ஆனால் அவராலோ அந்த ஆட்சி தலைவரிடம் நேரடியாக சென்று என்னுடைய மக்களுக்கு விடுதலை கொடு என்று கூற முடியாத அவல நிலை பாரதியாருக்கு.*

*என்ன செய்யலாம் எப்படி மாற்றலாம் என்கின்ற எண்ணத்தோடு தனக்குள் தானே குமறுகின்றான் உளறுகின்றான் போராடுகின்றான் இறுதி கட்டமாக உணர்வு பொங்கி எழ கவிதைகள் முட்டி மோதி தன்னுடைய உணர்விலிருந்து வெளிவரும் உள்ள கிடக்கையாக கவிதை வடிவில் பொங்கி எழுகின்றது. அந்த வடிவத்தை மக்கள் அனைவரின் உள்ளத்திற்கும் சென்று அடைய வேண்டும் என எண்ணுகிறான்.*

*ஊர் ஊராக தெருத்தெருவாக ஒரு விடுதலைத்தாக முனிவனாக அலைந்து ஒவ்வொருவருடைய உள்ளக் கதவை தட்டி மோதி திறந்து இது நம் நாடு இது நம் தேசம் இங்கு அனைவரும் ஒன்று ஒரே குலம் ஒரே ஜாதி ஒரே மதம் நாம் அனைவரும் ஒன்று இதற்கு ஏது தலைவர் நான் இருப்பது அடிமை தனம் எவருக்கும் நாம் அடிமை கிடையாது அனைவரும் ஒன்று அனைவரும் இங்கு சமநிகர் என்பதை தமிழ் பால் மூலமாக ஊட்டி விடுதலை என்கின்ற உணர்வை வளர்த்து போராட வைத்தவர்.*

*ஆம் இன்று நாம் சுதந்திர முச்சை உள்ளுணர்வோடு சுவாசித்து நிதம் நிதம் தூங்கி எழும் அழகான இந்த பூமி அவனும் தந்தது.*

***"ஊமை சனங்களின் வறுமையும் துன்பத்தையும்***
***கண்டு, கஞ்சி குடிப்பதற்கிலார் - அதன் காரணங்கள்***
***இவையென்னும் அறிவுமிலார்***
***பஞ்சமோ பஞ்சமென்றே - நிலம்***
***பரிதவித்தே உயிர் துடிதுடித்தே***
***துஞ்சி மடிகின்றாரே........***
***என்னிலா நோயுடையார் - இவர்***
***எழுந்து நடப்பதற்கும் வலிமையிலார்***
***புண்ணிய நாட்டினிலே - இவர்***
***பொறியற்ற விலங்குகள் போல் வாழ்வார்"***

***- பாரத ஜனங்களின் தற்கால நிலைமை 6;7 பக்:47.***

*என்றெல்லாம் பாரதி நெஞ்சு பொறுக்காமல் குமுறுவதையும் நாம் காண்கிறோம்.*

*பாரதியும் அவனது கவிதைகளில் பல இடங்களில் தன் தேசத்து மக்கள் வறுமையிலும் அடிமையிலும் பாழ் கிணற்றில் கிடக்கும் அவல நிலையை உணர்ந்து தன்னால் என்ன முடியும் என்பதை அவர்களுக்கு தன் அறிவு மற்றும் உணர்வுபூர்வமான அறிவூட்ட தன் உள் உணர்வை வெளிக்கொணர்ந்தவர்.*

***"பாரதி காலத்திற்கு முன்புவரை ஆளும் வர்க்கத்தை நேரடியாக எதிர்த்து எழுதப்பட்ட இலக்கியப் பதிவுகளை காண்பது அரிது"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.***

***"புலவர்தம் பாடல்களிலும் துதி பாடும் போக்கே நிலவி வந்தது"***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.***

***"ஆளும் வர்க்கத்திற்கு எதிரான எதிர்ப்புக் குரல் பாரதியின் கவிதைகளிலிருந்துதான் உயிர்த்தெழத்***

*தொடங்கியது"*

*- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:3.*

## சுதந்திரத்தாகம்

*பாரதியார் சுதந்திரம் எனும் தண்ணீரை குடிப்பதற்காக தவமாய் தவமிருந்து தாகத்தோடு காத்திருந்தவர். இளைஞர்களுக்கு நாட்டின் சுதந்திர உணர்வை ஊட்டி வீர முழக்கத்தை முழங்கிட செய்து நெஞ்சிலே வீர உணர்வை ஊட்டி சுதந்திரம் என்கின்ற ஒன்றையே தினம் பாடும் பாடலாக ஓத வைத்தவர்*

***"அச்சமில்லை, அச்சமில்லை என்பன போன்ற பல பாடல்களைப் பாடி, சோர்ந்து கிடந்த இளைஞர்களையும் எழுந்து உட்கார வைத்து சுதந்திர தாகத்தைத் தூண்டி அவர்களது மனங்களை உழுதவர் மகாகவி"***

*- பாரதியின் தேசப்பற்று.*

*"வாசலில் வந்து நின்ற குடுகுடுப்பைக்காரன் உடுக்கையடித்து நாட்டுக்கு பொறக்குது என குறி சொன்னதற்காக, தான் அணிந்திருந்த வேட்டியைக் கூட சிறிதும் யோசிக்காமல் அவிழ்த்துக் கொடுத்த வள்ளல் தான் பாரதி"*

*- பாரதியின் தேசப்பற்று.*

*"நாம் பிறந்த பாரத நாட்டை நம் உயிர் கொடுத்தாவது காக்கவேண்டும்.*
*பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்*
*நற்றவ வானினும் நனி சிறந்தனவே*

*- மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி; பக்:18.*

*என வேறொடு பாடலில் பாரதியார் குறிப்பிட்டுள்ளார்".*

*"பாரதிக்கும் பிறநாட்டு சுதந்திரப் போராட்டங்கள் ஆதரவாக விளங்கின"*

*- பாரதியும் ஷெல்லியும்; பக்: 45.*

***"சுதந்திர லட்சியத்தைப் பற்றி பலபடப் பாராட்டிப் பாடியுள்ளான்".***

*- பாரதியும் ஷெல்லியும்; பக்: 45.*

*"பாரதியும் தனது சுதந்திர தேவியைப் பின்வருமாறு உவமித்து துதி செய்கிறான்"*

*- பாரதியும் ஷெல்லியும்; பக்:46.*

***"சுதந்திரத்தை "ஆரமுது" "விண்ணில் இரவி" வண்ண விளக்கு "வாராது வந்த மாமணி" "கண்ணீரால் காத்த பயிர்" "வான மழை" என்றெல்லாம் பாரதி பிற பாடல்களிலும் (சுதந்திரப் பயிர், சுதந்திரப் பெருமை பலவாறு உவமித்துக் கூறுவதையும் நாம் காணலாம்"***

*- பாரதியும் ஷெல்லியும்; பக்: 47.*

## ஒற்றுமையே வலிமையாம்

*ஒற்றுமையாக இருப்பது தான் மனித குலத்திற்கு அழகு. ஒன்று பட்டால் உண்டு வாழ்வு. தனியாக இருந்து எதையும் சாதிப்பதை விட அனைவரும் சேர்ந்து குரல் கொடுத்தால் அதற்கு ஒரு வலிமை உண்டு என்பதை நாம் காணலாம்.*

*எந்த ஒரு சூழ்நிலையிலும் யாரும் யாரையும் குறை கூறாமல் விட்டுக் கொடுத்தோம் என்றால் வாழ்க்கை அழகு தரும். இதுதான் ஒற்றுமை இந்த ஒற்றுமையை நமக்கு கற்றுக் கொடுப்பது அஃறிணை உயிர்களும் கூட இருக்கின்றது. இந்த உயரிய கொள்கையைத் தான் பாரதியாரும் நமக்கு கவிதை மூலமாக வெளிக் கொணருக்கிறார். இந்தியர்கள் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதை பாரதி மொழியில்,*

***"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில்***
***ஒற்றுமை நீங்களால் அனைவருக்கும் தாழ்வு"***

*- மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி; பக்:18.*

*"எப்பொழுதும் ஒற்றுமையாக இருந்து செயல்படுவது நமக்கு வெற்றியைத் தரும்".*

*- மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி; பக்:50.*

## தையலை உயர்வு செய்

*பெண்களை உயர்வாக நினைக்க வேண்டும். அதுமட்டுமல்ல, அவர்களுக்கு உயர்பதவிகள் அளித்தும் சிறப்பிக்க வேண்டும். பெண்களின் முன்னேற்றத்திற்கு பெரிதும் உழைத்தவர் பாரதியார். அவர் பாடிய பல கவிதைகள் பெண்ணின் மேன்மை பற்றியனவே ஆகும்.*

*பாரதியாரின் காலம் வேறு நாம் இன்று வாழும் காலம் வேறு ஆனால் அன்றைய காலத்தில் அவர் வாழ்ந்த சூழ்நிலையில் பெண்கள் அடிமைப்பட்டு இருந்தது பொறுத்துக் கொள்ளாத பாரதியார் அவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும் என்றும் அவர்கள் விடுதலை என்னும்*

*அடிமை பிடியிலிருந்து விடுபட வேண்டும் என்றும் போராடி இருக்கின்றார். அதையே தன்னுடைய கவிதையின் உள் கருவாக வைத்து பாடியிருக்கிறார்.*

*பெண் விடுதலை அடைவதற்கு அவர்கள் கல்வி அறிவு பெற வேண்டும் அதுவே அவர்களை உயர்ந்த நிலையை அடைய வைக்கும் என்று போராடினார். இன்றைய காலம் இருபதாம் நூற்றாண்டு இந்த காலத்தில் பெண்கள் இல்லாத துறையே கிடையாது. எத்துரையிலும் பெண்கள் சிறந்து விளங்குவது நம் கண் கூட காணமுடிகிறது. அவரின் அன்றைய நீரூற்று இன்றைய நதியாக மாறி ஓடி வளம் கொடுக்கிறது.*

*பெண்கள் முழுமையான சுதந்திரம் என்கின்ற மூச்சுக்காற்றை சுவாசித்து வாழ்க்கையை தைரியமாக நடத்தி வருவதை காண முடிகிறது. அதற்கு அன்றைய அவரின் தியாக வாழ்க்கை முறை ஒரு காரணம். அவர் பெண்களுக்கு கல்வி வேண்டும் என்று அவர் போட்ட கூப்பாடு. கல்வி ஒருவருக்கு இருப்பின் ஏழேழு பிறவிக்கும் உதவும் அது சத்தியமான உண்மை என்பதை நாம காண்கிறோம்.*

*பாரதி காலத்தில் குழந்தை மனம், விதவைகளை உடன்கட்டை ஏறவைத்தல் மூலையிலே முடக்கி வைத்தல் பெண்ணுக்கு சொத்துரிமை இன்மை, பெண் விவாகரத்து செய்வது சமூக கொடுமை என சமூக ரீதியாக பெண்கள்பால் பல அநீதிகள் இருந்ததை அவர் கட்டுடைத்தார் தன்னுடைய கவிதை மூலமாக.*

*பாரதி காலத்தில் குழந்தை மனம் இருந்ததை அவர் வெறுத்தார். அவருக்கே குழந்தை திருமணம் என்பது நாம் அறிவோம்.*

*சொத்துக்கள் பிரிந்து போகாமலிருக்கக் குழந்தை மணம் நடைமுறையில் இருந்தது. பாரதிக்கே அந்த கதி நிகழ்ந்தது. பெண் கல்வி மறுக்கப்பட்டது விதவைகள் உடன்கட்டை ஏற்றப்பட்டனர்*

*- பாரதியின் சமுதாயத் சிந்தனைகள் பக்: 24.*

*''பெண்ணுக்கு சொத்துரிமை பற்றி அன்றே அவர் குரல் கொடுத்திருக்கிறார். இன்றுவரை ஒரு குடும்பத்தின் வாரிசு ஒரு பெண் என்றால் அக்குடும்பத்தின் சொத்து முழுவதும் அவளைத் திருமணம் செய்து கொள்பவனையே போய்ச் சேர்கிறது. ஆனால் பாரதி, பெண் திருமணம் செய்து கொண்டால் அவள் கணவனுடைய சொத்தை அவள் சொத்தாகவே பாவிக்க வேண்டும் என்கிறார்''.*

*- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:32.*

*பெண்ணுக்கு விடுதலை கிடைக்கும் போது மண்ணுக்கு விடுதலை கிடைக்கும் என்கிறார்.*

***''பெண்ணுக்கு விடுதலை கிடைக்கும் போதுதான் மண்ணுக்கு விடுதலை கிடைக்கும்''***

***- பாரதியின் சமுதாய சிந்தனைகள்; பக்:24.***

***''பெண் விடுதலை பெற வேண்டுமாயின் அவர்களுக்குக் கல்வி வேண்டும் என்று கூறிப் பல்வேறு தளங்களில் பெண்களின் கல்வி பற்றிய சிந்தனைகளை எடுத்துரைத்துள்ளார் மகாகவி''.***

***- பாரதியின் சமூக சிந்தனை; பக்:22.***

***''பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்''.***

***- பாரதியார் கவிதைகள்; பக்:431.***

*அச்சமும் நாணமும் பெண்ணுக்கு வேண்டியதில்லை அது நாய்களுக்கு வேண்டும் என்று சாடியவர்.*

*''கணவனை விவாகரத்து செய்தால் அரசியல் சட்டம் அதற்கு இடம் கொடுக்கும். ஆனால் சமூகச் சட்டம்? இதைக் கவனத்தில் கொண்டுதான் பாரதி பெண் விவாகரத்து பெற்றால் ஊரார்க்காரரும் அவளுக்கு ஆதரவாய் இருக்க வேண்டும், அவளைத் தூற்றக் கூடாது எனக் கருத்துரைக்கிறார்''*

*- பாரதியின் சமுதாயச் சிந்தனைகள்; பக்:31.*

## நிறைவுரை

*தமிழ் மொழியின் சிறப்பை அவர் தன் கவிதையில் ஒவ்வொரு இடமும் சிறப்பித்து இருப்பதை காண முடிகின்றது. இறைவன் என்பவன் ஒருவன் அவன் அறிவின் ஒளி அதாவது ''ஒளிவீசும் அறிவு தான்'' இறைவன் என்று கூறுகின்றார்.*

***''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்''***

***- பாரதியார் கவிதைகள்; பக்:159.***

*இன்று கடவுளை அவரவர்களுக்கென கண்டுணர்ந்த உருவமாக செய்து வணங்குகின்றனர். ஆனால் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவன் (பரம்பொருள்) ஒருவனே என கருதி வணங்க வேண்டும். அவனுக்கு எவ்வித உருவம் இல்லை அவனுடைய நிலை "ஒளி வீசும் அறிவுதான்" அதாவது இறைவன் ஒருவனே அவன் அறிவின் வடிவமாக திகழ்கிறான் என்கிறார்.*

***"ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று தேடி***
***அலையும் அறிவிலிகாள்! - பல் ஆயிரம்***
***வேதம்***
***அறிவொன்றே தெய்வமுண்டு***
***ஆம் எனல் கேளீரோ?***

***- மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திச்சூடி; பக்:5.***

*இவ்வாறு அவர் தன் கவிதை மூலமாக உலகத்தின் சமுதாய சிக்கல்களை மையமாக வைத்து கவிதையாக எழுதி அதற்கு தீர்வும் கண்டுள்ளார்.*

**பார்வை நூல்கள்**

*1. பாரதி நூல்கள்: பதிப்பு வரலாறு, சீனி. விசுவநாதன், முதற்பதிப்பு : நவம்பர் 1989, மாருதி பிசினஸ், சென்னை - 600042 .*
*2. பாரதியின் தேசப்பற்று, நா. கணேசன், தினமணி, 11 செப்டம்பர் 2009 கட்டுரை, 18.09.2009. எஸ். வி. எஸ், ஃபஸ்ட் பப்ளிஸ்ட் : 11, செப்டம்பர் 2009 . 12: 6 ஏ.ம் .ஐ .எஸ். டி, லாஸ்ட் அப்டேட்.*
*3. பாரதியின் சமுதாய சிந்தனைகள், முனைவர் க., சானகிராமன், பதிப்பு: 2004. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம், தரமணி, சென்னை.*
*4. பாரதியார், சுப்ரமணிய பாரதி.சி, இலக்குமி நிலையம், சென்னை, 2001.*
*5. மகாகவி பாரதியாரின், புதிய ஆத்திச்சூடி மூலமும் உரையும், தமிழ்ப்பிரியன், எம்.ஏ.. எம், அருணா பப்ளிகேஷன், முதல் பதிப்பகம் டிசம்பர் 2010, சென்னை.*